தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 22, பவ - திருவள்ளுவர் ஆண்டு—2025

1994, நவம்பர் 7, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது"

ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வருவது என்பது ஒருவரது உறுதியைக் காட்டுவதாகும். அவ்வாறு உறுதிபெற்றபின் வினையைச் செய்து முடிப்பதில் காலந்தாழ்த்துவது என்பது குற்றமாகும்.

1. வினாக்கள்--விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்--விடைகள். வினா எண் 21, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு நிதியமைச்சர்.

21—

அனைத்துப் பள்ளிகளிலும் சஞ்சாயிகா சேமிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

***26485–திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1994 நவம்பர் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை. பள்ளி மாணவர் சேமிப்புத் திட்டமான சஞ்சாயிகா தமிழகத்தில் உள்ள 5,288 பள்ளிகளில் மட்டும் நடைமுறையில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தில் சுமார் 29,32,395 மாணவ, மாணவிகள் சேர்ந்துள்ளனர். இதன் மூலம் 1993–94 நிதியாண்டில் சுமார் 1.73 கோடி ரூபாய் சிறு சேமிப்பில் திரட்டப்பட்டுள்ளது. வரும் 1994–95 கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள எல்லா உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும் சஞ்சாயிகா திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் அதை அனைத்து உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலே செயல்படுத்த இருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். இன்றைக்கு நான் கேட்க விரும்புவது இந்த சஞ்சாயிகா திட்டம் என்பது இளம் பிஞ்சு உள்ளங்களில் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு நல்ல திட்டமாகும். இந்தத் திட்டத்தில் மாநில அளவில் அதிக அளவு சேமிக்கக் கூடிய மாணவர்களுக்கு அரசு சிறப்பாக ஏதேனும் அவர்களது படிப்பிற்கு உதவித்தொகை வழங்குமா, ஊக்கம் அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சஞ்சாயிகா திட்டத்தில் சேர்ந்து எந்தெந்தப் பள்ளிகள் சிறப்பான முறையில் நிதி திரட்டி வருகின்றனவோ, அந்தப் பள்ளிகளுக்கு சிலபல பரிசுகள் வழங்கப்படுகின்றன. அந்தந்தப் பள்ளிகளிலே மாணவர்களாக இருப்பவர்கள் அதிகமான தொகையை இந்த சேமிப்பு நிதியிலே சேர்ப்பார்களேயானால், அவர்களுக்கும் தனியாக சிறப்புப் பரிசு தரப்படுகின்றது. ஆனால் அப்படிப்பட்ட நிலையில் மாநிலத்திலே இருக்கிறவர்களுக்கு உதவித்தொகை தருவதில் படிப்பிற்கு உதவித்தொகை தருவது என்கின்ற நிலை இல்லை. 1988–89-ல் 3,014 பள்ளிகளிலே இந்தத் திட்டம் நடைமுறையில் இருந்தது. அது ஆண்டுக்காண்டு வளர்ந்து 1993–94–ல் 5,288 பள்ளிகளில் வந்திருக்கிறது. தொடர்ந்து பல பள்ளிகளிலே வைக்கவேண்டும்.

1994 நவம்பர் 7]

அதன்மூலம் மாணவர்களுக்கு சிக்கனப் பண்பும், சேமிப்புப் பழக்கமும் ஏற்பட வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாக வைத்து, அரசு தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புத் திட்டத்தை, மக்கள் மத்தியில் பரப்புவதற்கு முகவர்கள் இருப்பதைப் போல இந்த நல்ல திட்டமான சஞ்சாயிகா திட்டத்தை மாணவர்கள் மத்தியில் பரப்புவதற்கும், அதைச் செயல்படுத்துவதற்கும், ஆசிரியர்கள் பகுதிநேர முகவர்களாக நியமிக்கப்படுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முகவர்களாக இருந்து பணியாற்றுகின்ற பணியை யாரும் செய்யலாம். அதற்கு அரசுக்கு அவர்கள் விண்ணப்பம் கொடுப்பார்களேயானால், அதன் அடிப்படையிலேதான் பல பேருக்கு அளிக்கப்படுகின்றது. ஆனால் அரசுப் பணியிலே இருப்பவர்கள் முகவர்களாக இருக்கலாமா என்பது பற்றி யோசிக்கவேண்டும். ஆனால் தனியார்களில் யார் வேண்டுமானாலும் முன்வரலாம். அதற்கான சில தகுதி, திறமைகள் வகுக்கப்படுகின்றன. அவற்றை நிறைவேற்றுகின்றவர்கள் எவரும் முகவர்களாக வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி க. பழனியம்மாள்.

திருமதி. க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புத் திட்டத்தில் குலுக்கல்கள் நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாணவர்கள் இந்த சஞ்சாயிகா திட்டத்தில் சேர்ந்து சேமிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் விதத்தில் பெற்றோர்களே முன்வந்து மாணவர்களை அதில் ஊக்கப்படுத்துவதற்கு வசதியாக ஒரு சிறிய அளவிலே பரிசுக் குலுக்கல்கள் நடத்தி, அதற்குப் பரிசு கொடுத்து, இந்தத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிறு சேமிப்புத் துறையில் பரிசுக் குலுக்கல்கள் என்பது--500 ரூபாய்க்கு மேல் சிறு சேமிப்பிலே வைப்பீட்டுத் தொகையாக வைப்பவர்களுக்கு மட்டும் தான் பரிசு வழங்கப்படுகிறது. ஆனால் பள்ளிகளிலே இவ்வளவு பெரும் தொகையை, மாணவர்கள்,

மாணவியர்கள் வைப்பு நிதியாக வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆனால் அவர்களுக்கென்று ஒவ்வொரு பள்ளியிலேயும்--ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கணக்கு எடுக்கின்றபோது சிறந்த முறையிலே சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கின்ற பள்ளிகளுக்கு மின்விசிறி தருதல் போன்ற பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படுவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

22—

வடலூரில் உரிமையியல் மற்றும் ஜுடீசியல் முதல்நிலை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் அமைத்தல்

**26104*--திரு. கு. சிவசுப்பிரமணியன்:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், வடலூரில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் ஜுடீசியல் முதல்நிலை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், வடலூரில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்குமாறு கோரி வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் வழக்காடும் பொது மக்களிடமிருந்து முறையீடுகள் எதுவும் பெறப்படவில்லை என்றும் அத்தகைய செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை எனவும் சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் நின்று தாங்கள்